

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கும் மண்டலம் 9–இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 26.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | | விளாத்திகுளம் | ஜி.வி.மஹால் விளாத்திகுளம் |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 16-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

மண்டல வாரியாக தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டம்!

## மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

சென்னை, ஏப்.20- மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு; தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நீலகிரியில் நடந்த மாணவர் அணியை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைத் தொடர்ந்து, "மண்டல வாரியாக மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்" நாளை (21.04.2025) காலை 9.30 மணிக்கு மாணவர் அணி மாநில துணைச் செயலாளர் ஜெ.ராமகிருஷ்ணன் முன்னிலையில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான பவளவிழா மாளிகையில் காஞ்சிபுரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்திய, திருப்பத்தூர், வேலூர் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் மாவட்ட, மாநாகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டமும் நடைபெறவுள்ளது.

மேற்கண்டவாறு நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் புதுச்சேரி மாநில அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்வதோடு, கூட்டத்திற்கு வரும் மாவட்ட, துணை அமைப்பாளர்கள் தத்தமது அமைப்பின் நடவடிக்கைக் குறிப்பேட்டினை (மினிட் புத்தகம்) தவறாது கொண்டுவர வேண்டும்.

அத்துடன், இதுவரை செய்த செயல்திட்டங்கள் குறித்த புகைப்படத் தொகுப்புகளை அவசியம் கொண்டுவர வேண்டும். அத்துடன் கல்லூரிகள் கட்டமைப்பின் தகவல்களையும் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் செ.சரவணன் ஏற்பாட்டில் ஈத்தாமொழி மற்றும் இராஜாக்கமங்கலம் சந்திப்பு பகுதிகளில் கோடை வெயிலில் பொது மக்களின் தாகத்தை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட நீர் மோர் பந்தல் திறப்பு விழாவில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர், மோர், தர்பூசணி போன்றவற்றை வழங்கினார். நிகழ்ச்சியில் ஜெ. ஹெலன் டேவிட்சன், ஐ.கேட்சன், ஆ.லிவிங்ஸ்டன், வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா.வெ. நாராயணசாமி

ஏப்ரல் 20 (2012)



தொழிலாளர் அணியின் மாநிலச் செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் – திருவொற்றியூர் நகர்மன்றத் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர் "மா.வெ.நா." என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர்.

திருவொற்றியூர் பகுதியிலே உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிற் சங்கத் தலைவராக பல ஆண்டுகாலம் பணியாற்றி, தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக பெரிதும் பாடுபட்டவர்.

மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

" மிசா கொடுமைக்கு ஆளான போதிலும், கொண்ட கொள்கையில் உறுதியோடு பணியாற்றியவர் மா.வெ.நா. !" என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

மாநிலங்களை உருவாக்கி உரிமைகளை வழங்கிய நேருவைப் போல்–

# மாநில உரிமைகளை மீட்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின்!



தமிழ்நாடு அரசுக்கும் - மாநில ஆளுநருக்குமான வழக்கில் உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு இந்தியா முழுவதும் பெரிய அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது.

ஒன்றிய – மாநில உறவுகள் குறித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஆளுநர்களின் அதிகார எல்லைக்கு ஓர் சரியான தீர்ப்பாகும்.

தற்போதைய சூழலில் இந்தியாவில் மாநிலங்களின் அதிகாரங்களில் படிப்படியாகஒன்றிய அரசு ஆக்கிரமிப்பு செய்து வருகிறது. ஒன்றியம் – மாநிலங்கள் இருவரும் பயன்படுத்த பொதுப்பட்டியல், ஒன்றிய அரசாங்கத்திற்கானபட்டியல், மாநில அரசாங்கத்திற்கான பட்டியல் என அதிகாரங்களைக் கொண்ட கூட்டாட்சியாக இந்தியா இருந்து வருகிறது.

ஒன்றிய அரசினை பா.ஜ.க. கூட்டணி ஆளுகிறது. மாநிலங்களை பல்வேறு மாநிலக் கட்சிகளும் சில மாநிலங்களில் பா.ஜ.க.வும் சில மாநிலங்களில் காங்கிரஸும் ஆட்சி புரிகின்றன. பா.ஜ.க. ஆட்சி புரியாத மாநிலங்களில் அந்தந்த மாநில ஆளுநர் மாநில அரசை ஆட்சி செய்ய விடாமல் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழ்நாட்டை ஆட்சிபுரியும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் தி.மு.க. ஆட்சியினை மாநில ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் தொடர்ந்து பல்வேறு இடையூறுகள் செய்து வருகிறார். அரசியலமைப்பு சட்டப்படி மாநிலத்தின் ஆட்சியின் தலைவர் ஆளுநர் ஆவார். அவர் தலைமையில் உள்ள அரசினை அவரே அறிக்கைகள் வாயிலாகவும் அவர் கலந்து கொள்ளும் கூட்டங்கள் வாயிலாகவும் பல்வேறு குறைகளையும் விமர்சனங்களையும் தொடர்ந்து பொதுவெளியில் சொல்லி வருகிறார். அவர் சொல்ல வேண்டிய கருத்துக்களை குறைகளை ஆதாரமிருப்பின் அவர் தமிழக அரசாங்கத்திற்கு நேரடியாகக் கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும். இதுதான் அவர் பொறுப்பேற்றிருக்கும் பதவிக்கான பொறுப்பு ஆகும்.

ஆனால் பொதுவெளியில் தினமும் விதிமுறைகளுக்கு மாறாக தவறாகப் பேசி வருகிறார். சட்டமன்ற கூட்டத் தொடரை ஆண்டு தொடக்கத்தில் தொடக்கி வைக்கும்போது அரசின் திட்டங்களை சட்டங்களை அமைச்சரவையில் நிறைவேற்றியபடி தயாரிக்கப்பட்ட உரையினை வாசிக்க வேண்டும். ஆனால் அவரது விருப்பப்படி வாசிக்கிறார் அல்லது வாசிக்காமல் பாதியில் சென்று விடுகிறார்.

"இதனைத் தொடர்ந்து மக்கள் நலன் சார்ந்து சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு விடுகிறார். சில மசோதாக்களை விதிமுறைகளுக்கு மாறாக திருப்பியனுப்பி விடுகிறார். சில மசோதாக்களை குடியரசுத்தலைவருக்கு அனுப்பி விடுகிறார். சில மசோதாக்களை இன்னமும் கிடப்பில் போட்டுள்ளார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உள்ள அரசு கடந்த 3 ஆண்டுக்கு மேலாக ஆளுநர் ரவியின் செயல்களால் மசோதாக்களை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் மக்கள் நலத் திட்டங்கள் பெரிதும் பாதித்துள்ளது.

வளர்ச்சி பணிகள் பாதித்துள்ளது. இவையனைத்தும் குறித்து உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள். இந்த வழக்கின் தீர்ப்பு சமீபத்தில் வந்தது. இதில் ஆளுநர் செயல்பாடு குறித்தும் அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், இந்திய அரசியலமைப்புச்சட்டம் 200 என்ன சொல்கிறது என்ற விளக்கமான 415 பக்கம் கொண்டதீர்ப்பினை உச்சநீதிமன்றம் வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பின் முக்கிய சாராம்சம் ஒரு மாதத்திற்குள் எந்த ஒரு மசோதாவிற்கும் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். ஒப்புதல் அளிக்கவில்லையென்றால் எந்தக் காரணத்திற்காக மசோதா ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்பதை தெரியப்படுத்தி அரசுக்கு திருப்பியனுப்ப வேண்டும். அரசு திருப்பியனுப்பிய மசோதாவைதிரும்பவும் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் ஒரு மாதத்தில் ஒப்புதல் அளிக்க வேண்டும். அதைத்தவிர எந்த ஒரு வழியும் இல்லை. எந்தக் காரணமும் இல்லாமல் அதிகபட்சமாக மூன்று மாதங்கள் எடுத்துக் கொள்ளலாம். அரசியல் சட்டவிதிமுறைகள் மாறுதல் இருந்தால் அல்லது எதிராக இருந்தால் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம். இப்படி பல்வேறு காரணங்களைச் சொல்லி காலக்கட்டுப்பாட்டினை ஆளுநருக்கும் குடியரசுத்தலைவருக்கும் விதித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேலும் இந்த தீர்ப்பில் அரசிலயமைப்புச் சட்டத்தின் 142வது பிரிவில் கூறப்பட்ட சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றமே 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது!

ஆளுநராக இருப்பவர்கள் நண்பராகவும் வழிகாட்டியாகவும் அரசியல் அமைப்பு சட்டத்தை பாதுகாப்பவராகவும் விளங்க வேண்டும் என்று கூறியுள்ளது.

இந்தத் தீர்ப்பு இந்திய வரலாற்றில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாகும்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆளும் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, மேற்கு வங்கம், தெலுங்கானா, பஞ்சாப் என தொடர்ந்து பல்வேறு மாநிலங்கள் அவதிப்படும் வேளையில் இதற்கெல்லாம் விடிவுக்காலம் கிடைக்கும் வகையில் இந்தத் தீர்ப்பு அனைத்து மாநிலங்களுக்கான தீர்ப்பாகவும் ஒன்றிய அரசாங்கத்திற்கானதீர்ப்புக்காகவும் அமைந்துள்ளது.

இந்தத் தீர்ப்பில் 34 நாடுகளின் அரசியல் சட்டத்தையும் குடியரசுத் தலைவர் மற்றும் அரசர் இவர்களின் அதிகாரங்கள் செயல்பாடுகள் என அனைத்தையும் சீர்தூக்கி பார்த்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தியாவிடுதலை பெற்றவுடன் பிரதமராக பொறுப்பேற்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியாவுக்கான பாராளுமன்ற ஜனநாயக ஒன்றிய அரசியல் அமைப்புச்சட்டத்தை உருவாக்கினார். இந்திய ஜனநாயகம் ஆசியாவில் ஏன் உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயகமாக உருவெடுத்தது. இதனைத் தொடர்ந்து மாநிலங்கள் பல உருவாக்கப்பட்டன. பிறகு இந்தியா மாநிலங்களுடன்கூடிய கூட்டாட்சியாக மலர்ந்தது. இதைக் கண்ட பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் ஆசியாவின் ஜோதி ஜவஹர்லால் நேரு என பாராட்டினார். கௌதம புத்தருக்குப் பிறகு ஆசியாவின் ஒளிவிளக்கு என 1955இல் கூறினார்.

இந்தியா விடுதலை பெற்றவுடன் பாராளுமன்ற ஜனநாயக் குடியரசினை அமைத்து அதற்கான அரசியல் சட்டத்தை உருவாக்கி மாநிலங்களை உருவாக்கி அதற்கான உரிமைகளை வழங்கிய ஆசியாவின் ஜோதி .ஜவஹர்லால் நேருவைப் போல் பல மாநிலங்கள் பல இனங்கள் பல மொழிகள் பல பழக்க வழக்கங்கள் பல நாகரீகங்கள் உள்ள இந்தியாவில் சக்தி வாய்ந்த ஓர் அரசாங்கத்தை எதிர்த்து தனக்கு வருகிற சங்கடங்களை பற்றியெல்லாம் கவலைப்படாமல் மிக தைரியமாக போர் குணத்தோடு மாநில உரிமைகளை மீட்டெடுக்க வழக்காடிய தமிழக முதலமைச்சர், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் இந்தியாவின்மாநிலங்களுக்கான உரிமைகளை மீட்பதற்கான மிகப் பெரிய பணியினை செய்துள்ளார். எனவே பெருமகனார் தளபதி ஸ்டாலின் அவர்கள் "இந்திய மாநிலங்களில் ஜோதி" என அழைக்கலாம்.

அதேபோல 1800 ஆண்டுகளிலிருந்து 1902 வரை கருப்பினர்கள் அதிகமாக வாழும் தென்னாப்பிரிக்காவில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆட்சி நடத்தியது. பிறகு தன் இனத்தைச் சார்ந்த வெள்ளையர்களிடம் 1902இல் ஆட்சியை ஒப்படைத்து வெள்ளையர் ஆட்சி நிறவெறி ஆட்சியாக நடைபெற்று வெள்ளையர்களுக்கும் தனி உணவகம். கருப்பர்களுக்குத் தனி உணவகம். வெள்ளையர்கள் தெருவில் கருப்பர்கள் நடமாட முடியாது. இது போல் பல வருடங்களுக்கு இப்படியே ஆட்சி நடந்தது.

- வி.ஆர்.எஸ்.சம்பத்
வழக்கறிஞர்,
ஆசிரியர், சட்டக்கதிர்

இந்த ஆட்சியை எதிர்த்து தொடங்கிய ஆப்பிரிக்கா தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் நெல்சன் மண்டேலா 1943இல் சேர்ந்து பெரும்பணியாற்றி அவரின் போராட்டத்தால் கோபமடைந்த வெள்ளையர் சிறுபான்மையினர் அரசு 27 ஆண்டுகள் சிறையிலே வைத்தனர். நெல்சன் மண்டேலா எந்தவித அடக்குமுறைக்கும் அடிபணியாமல் தொடர்ந்து எதிர்த்து போராடி 1994இல் விடுதலை பெற்று நெல்சன் மண்டேலா முதல் குடியரசுத் தலைவரானார். அதன்பின் கருப்பு இனத்தவர், கலப்பினத்தவர், இந்தியர், வெள்ளையர் என அனைவரையும் ஒன்றிணைத்து அனைவருக்கும் சமமான உரிமைகளை அதிகாரங்களை வழங்கி கூட்டாட்சி அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்தான்உலகம் போற்றும் உன்னத தலைவர் நெல்சன் மண்டேலா! அவர்கள்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையும் வெள்ளையர்களை எதிர்த்து போராடி 27 ஆண்டுகள் சிறையில் இருந்த தென்னாப்பிரிக்காவிற்கு விடுதலை பெற்றுத் தந்த ஏழை எளிய கல்வியறிவு அற்ற எவ்வித சக்தியும் அற்ற விளங்கிய கருப்பின மக்களுக்கான முழு சுதந்திரத்தை பெற்றுத் தந்த உலக மனித உரிமை போராளி நெல்சன் மண்டேலாவைப் போல இந்தியாவில் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசால் ஆளுநரால் இழக்கப்படும் அநீதிகளை எதிர்த்து தொடர்ந்து போராடி 4 ஆண்டுகள் வரையில் அரசியல் போராட்டம் சட்டப் பேராட்டம் நடத்தி உச்சநீதிமன்ற தீர்ப்பு மூலம் மாநிலங்களின் உரிமையை பெற்றுத் தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "இந்தியாவின் நெல்சன் மண்டேலா" என்று அழைக்கலாம்.

**இந்திய மாநிலங்களின் ஜோதி**
**இந்தியாவின் நெல்சன் மண்டேலா என**
**தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை**
**தமிழ்கூறும் நல்லுலகம் உரக்க அழைக்கும்**
**என்பதில் எவ்வித ஐயமில்லை.**